83—

குடிநீர் வசதி

***3097—திரு. ப. சத்திய நாராயணன்:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னை, மேற்கு மாம்பலம், பக்தவச்சலம் தெருவில் சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின்மூலம் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்து குடிநீர் வழங்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

சென்னை, மேற்கு மாம்பலம், பக்தவச்சலம் தெருவில், சென்னைப் பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின்மூலம் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்து குடிநீர் வழங்கப் போதுமான இடவசதி இல்லை என்பதால், மாற்றுத் திட்டங்கள்மூலம் குடிநீர் வழங்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. சத்திய நாராயணன் அவர்கள்.*

திரு. ப. சத்திய நாராயணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காக்கும் தெய்வம், காவல் காக்கும் தெய்வமாய்த் திகழ்ந்த, தமிழக மக்களின் நெஞ்சங்களில் என்றென்றும் நிறைந்த மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) 'இப்படை தோற்கின் எப்படை வெல்லும்' என்ற தாரக மந்திரத்தைக் கொண்டு, கழகத்தை வழி நடத்தும் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் இரு விழிகளாக விளங்கும் மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் அவர்களுக்கும், அவருக்கு உறுதுணையாக விளங்கும் மாண்புமிகு துணை முதலமைச்சர் அண்ணன் அவர்களுக்கும் எனது முதற்கண் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

2018 மே 30]

காவேரி மேலாண்மை வாரியம் அமைக்க நடவடிக்கை எடுத்து, மாண்புமிகு அம்மா அவர்களின் கனவை நனவாக்கியுள்ளார்கள் நமது முதல்வர் மற்றும் துணை முதல்வர் அவர்கள்.

மேலும், நேற்று சட்டமன்றப் பேரவையில் நிகழ்த்திய பதிலுரையில், தூத்துக்குடி ஸ்டெர்லைட் ஆலை குறித்து ஒட்டுமொத்த தமிழக மக்களும் குழப்பத்தில் இருந்தபோது, 'உள்ளங்கை நெல்லிக் கனிபோல', புள்ளிவிவரங்களுடன் தி.மு.க.-வின் பித்தலாட்டத்தை (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாட்டு மக்களுக்கு வெளிச்சம் போட்டுக் காட்டியுள்ளார் நமது முதல்வர் அவர்கள். இந்தப் பதிலுரையை உலகத்தில் உள்ள தமிழ் மக்கள் அனைவரும் தொலைக்காட்சி வாயிலாகக் கேட்டு பாராட்டி வருகின்றனர். மேலும், தியாகராய நகர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பொது மக்களின் சார்பாக எனது நன்றியை மாண்புமிகு முதலமைச்சர் மற்றும் மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுக்கு சமர்ப்பிக்கின்றேன்.

2016 ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலில் தியாகராய நகர் தொகுதி வேட்பாளராகப் போட்டியிட மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எனக்கு வாய்ப்பளித்தபோது, மேற்கு மாம்பலம் பகுதி பொது மக்களைச் சந்தித்து ஓட்டு சேகரிக்கச் சென்றேன். அப்போது பாலகிருஷ்ண முதலி தெரு, பாபு ராஜேந்திர பிரசாத் 1-வது தெரு மற்றும் 2-வது தெரு, இராமகிருஷ்ணபுரம் 1-வது தெரு, 2-வது தெரு மற்றும் இதேபோல் 17 தெருக்களில் குடிநீர்ப் பற்றாக்குறை இருப்பதாகப் பொது மக்கள் தெரிவித்தனர். எனவே, இதுசம்பந்தமாக சட்டமன்றப் பேரவையில் வினா கொடுத்திருந்தேன். அதேசமயம், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அண்ணன் அவர்களிடமும் கோரிக்கை வைத்திருந்தேன். எனவே, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் இதுசம்பந்தமாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், இன்னொரு கோரிக்கையை இந்தச் சட்டமன்றப் பேரவையில் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களிடம் சமர்ப்பிக்கிறேன். அசோக் நகர், 11-வது அவென்யூவில் உள்ள இரும்பு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியைப் புதுப்பித்து, அந்த நீர்த்தேக்கத் தொட்டியிலிருந்து அசோக் நகர், மேற்கு மாம்பலம் மற்றும் மேற்கு சைதாப்பேட்டை ஆகிய இடங்களிலுள்ள மக்களின் குடிநீர்த் தேவையை பூர்த்தி செய்திடும் வகையில்,

நிதி ஒதுக்கீடு செய்து, உடனடியாக அதற்கான பணிகளை மேற்கொள்ள உத்தரவிடுமாறு மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களைப் பணிவன்புடன் வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10-10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மேற்கு மாம்பலம் பகுதியானது வார்டு எண்கள் 133 (பகுதி), 135 மற்றும் 140 (பகுதி) ஆகியவற்றை உள்ளடக்கிய 185 தெருக்களைக் கொண்டுள்ளது. இப்பகுதியின் மக்கள்தொகை 65,000 ஆகும். இப்பகுதியில் இரண்டு நாட்களுக்கு ஒருமுறை காலை 4 மணி முதல் 6 மணி வரையில் குழாய்மூலம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. இப்பகுதியிலுள்ள பாலகிருஷ்ண முதலி தெரு, பாபு ராஜேந்திர பிரசாத் 1-வது மற்றும் 2-வது தெரு, இராமகிருஷ்ணபுரம் 1-வது மற்றும் 2-வது தெரு, போஸ்டல் காலனி, ஆரியகவுடா சாலை, காந்தி தெரு மற்றும் காசிகுளம் ஆகிய பகுதிகள் உள்ளிட்ட 25 தெருக்களுக்குக் குழாய்மூலம் குடிநீர் வழங்கப்படுகிறது. போதிய அழுத்தம் இல்லாத நிலையில், அடிபம்புகள்மூலம் குடிநீர் எடுக்கப்படுகிறது. மேலும், இப்பகுதியில் 32 குடிநீர்த் தொட்டிகள் மூலமாகவும், இரண்டு லாரிகள் மூலமாகவும் குடிநீர் வழங்கப்படுகிறது. மேற்கு மாம்பலம், பக்தவச்சலம் தெருவில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைப்பதற்குப் போதிய இடவசதி இல்லாத காரணத்தால், இப்பகுதிகளுக்கு குடிநீர் விநியோகத்தை மேம்படுத்த வேண்டுமென்று கோரியுள்ளார்.*

மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் நீண்டநாட்களாக இக்கோரிக்கையை விடுத்துள்ளார். மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் வாக்கு சேகரிக்கச் செல்லும்போது பல்வேறு வாக்குறுதிகள் கொடுத்ததாகச் சொன்னார்கள். நானும் தியாகராய நகர் தொகுதியில் நடைபெறும் பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உத்தரவிற்கிணங்க தினமும் சென்றிருக்கிறேன். காலையில் walking *போகும்போது நிறைய மக்களைச் சந்தித்துப்பேசி சிறப்பாகப் பணியாற்றுபவர் இந்தச் சட்டமன்ற உறுப்பினர். இரண்டு மாற்றுத் திட்டங்கள் என்று சொன்னது, இரண்டாவதாக வைத்த கோரிக்கையிலும்*

2018 மே 30]

வருகிறது. அசோக் நகர் முதல் அவென்யூவில் அமைந்துள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியிலிருந்து பிரத்யேக குடிநீர்க் குழாய்கள் அமைத்து குடிநீர் வழங்க 86,21,000 ரூபாய் மதிப்பில் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. மேலும் அசோக் நகர், 11-வது அவென்யூவில் பழுதடைந்த இரும்பு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி இருந்த இடத்தில் புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்து குடிநீர் வழங்க விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணி நடந்துவருகிறது. இப்பணிகளை விரைந்து முடித்து, இப்பகுதியில் குடிநீர்ப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும். அதேபோல், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட பகுதியிலும்கூட அவரே ஏதாவது இடம் கண்டுபிடித்துக் கொடுத்தால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கனிவான கவனத்திற்குக் கொண்டுசென்று, அங்கேயும் கண்டிப்பாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டித் தரப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. சத்திய நாராயணன் அவர்கள்.*

திரு. ப. சத்திய நாராயணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அண்ணன் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் V.P.B. பரமசிவம் அவர்கள்.*

டாக்டர் V.P.B. பரமசிவம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'நல்லவர் ஆண்டால் நாடெங்கும் நன்மழை பெய்யும்' என்ற சான்றோர் கூற்றுக்கிணங்க, புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய நல்லாட்சி நடக்கின்ற தமிழகத்திலே கோடையின் வறட்சிப் பிடியில் சிக்காமல் தமிழகமெங்கும் நல்ல மழை பெய்துவருகிறது. நம்முடைய முதலமைச்சர் அவர்களுடைய சிறப்பான தனிக் கவனத்தினால் நீர்நிலைகள் சிறப்பான முறையில் பேணிப் பாதுகாக்கப்படுவதுடன், மக்களுக்கு குடிநீர் விநியோகமும் சிறப்பான முறையில் நடந்துகொண்டிருக்கிறது என்பதை நாடே அறியும். இந்தச் சூழ்நிலையில் நம்முடைய O.H.T. Operators என்று சொல்லக்கூடிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி இயக்குபவர்களுடைய எண்ணிக்கை அனைத்து ஒன்றியங்களிலும் குறைவாக இருக்கிறது. அந்த O.H.T. Operators-ஐ தொகுப்பு ஊதியத்தில் பணியமர்த்துகின்ற ஒரு சூழ்நிலையை*

ஏற்படுத்துவோமென்று சொன்னால், இந்த நீர்ப் பங்கீடு என்பது தமிழகமெங்கும் சிறப்பான முறையில் நடைபெறும். அதனை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செய்து தருவாரா என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன். மேலும், ஒவ்வொரு ஒன்றிய அலுவலகங்களில் Electrician and Sanitary Inspectors பணியிடங்களில் இருந்தவர்கள் பணி ஓய்வு பெற்றபின்பு, அந்தப் பணியிடங்களை நிரப்பிட வேண்டிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. ஏனென்று சொன்னால், O.H.T.-ல் உள்ள Borewell-ல் பொருத்தப்பட்டுள்ள மோட்டார் ரிப்பேராகிவிட்டது என்று சொன்னால், அதை தனியார் Electrician வசம் கொடுக்கும்போது முறையாக அதனைச் சரிசெய்கிறார்களா என்ற ஒரு சந்தேகம் எழுகிறது.

ஒவ்வொரு ஒன்றியத்திலும் உள்ள Electricians சிறப்பான முறையில் அந்த மோட்டார்களை சரிசெய்தால் நமக்குச் செலவும் குறையும். அதேநேரத்தில் உரிய நேரத்தில் மின்மோட்டார்கள் சரிசெய்யப்பட்டு, மக்களுக்கு தங்குதடையின்றி குடிநீர் விநியோகம் செய்வதற்கான சூழ்நிலையும் ஏற்படும். எனவே, O.H.T. Operators, Electrician and Sanitary Inspectors பதவிகள் மிகவும் அத்தியாவசியம் என்பதால், அந்தப் பணியிடங்களை நிரப்பினால் நன்றாக இருக்குமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் சொல்லி, அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில் மட்டும் 1954.21 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 27,043 எண்ணிக்கையிலான மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் கட்டப்பட்டுள்ளன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் O.H.T. Operators, Electricians and Sanitary Inspectors பதவிகளில் உள்ள காலிப் பணியிடங்களைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். விதிமுறைகளுக்கு உட்பட்டு அனைத்துப் பணியிடங்களும் அம்மாவின் ஆட்சியில் நிரப்பப்படுகின்றன. பல இடங்களில் அந்தப் பணியிடங்கள் காலியாக இருக்கின்றன. அதையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று கண்டிப்பாக உடனடியாக அவற்றை நிரப்புவதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2018 மே 30]

முற்பகல் 10-15

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஊதிய விகிதம் பற்றியும் சொன்னார்கள். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர், அருமை அண்ணன் அவர்கள்தான் இன்றைக்கு ஏழாவது ஊதியக் குழுவின் பரிந்துரைகளை நிறைவேற்றுகிற சூழ்நிலையைக் கொண்டுவந்து, அனைத்து அரசு ஊழியர்களும் அதிகமான ஊதியம் பெறக்கூடிய வாய்ப்பை ஏற்படுத்தி, சரித்திரம் படைத்துள்ளார்கள். அதன் காரணமாக உள்ளாட்சித் துறையில் பல்வேறு நிலைகளில் பணிபுரியும் ஊழியர்களும் பயனடைந்துள்ளார்கள். O.H.T. operators பணியும் முக்கியமான பணி. அவர்கள் இரவு பகலாக வேலை செய்யக்கூடிய நிலை இருக்கிறது. ஆகவே, அவர்களும் பயனடையும் வகையில் நல்லதொரு நடவடிக்கையை அம்மா அவர்களுடைய அரசு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அவர்களுக்குக் கூடுதலாக எவ்வளவு உயர்த்த வேண்டும் என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுசென்று, கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பா. நீதிபதி அவர்கள்.

திரு. பா. நீதிபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'மக்களால் நான், மக்களுக்காகவே நான்' என்று தன் வாழ்நாள் முழுவதையும் தமிழ்நாட்டினுடைய வளர்ச்சிக்கும், தமிழக மக்களுடைய வளர்ச்சிக்கும் அர்ப்பணித்த தமிழகத்தினுடைய தாய் மாண்புமிகு அம்மா அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர் அவர்களையும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன்.

கடந்த சட்டப் பேரவையிலே மாண்புமிகு அம்மா அவர்கள், உசிலம்பட்டி நகராட்சிக்கு 52 கோடி ரூபாய் செலவிலே கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயல்படுத்தப்படும் என்று அறிவித்தார்கள். அடுத்த சட்டப் பேரவை கூட்டத்திலே இதே கேள்வியைக் கேட்கின்றபோது, நம்முடைய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள், அந்தத் திட்டம் பரிசீலனையில் உள்ளது என்று அறிவித்திருக்கிறார்கள். அதனடிப்படையில் இப்போது பெரியார்— வைகை பொறியாளர்களால் இந்தத் திட்டத்திற்கு 58 கோடி ரூபாய்க்கு திட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டு அரசினுடைய

பரிசீலனையிலே இருக்கிறது. இந்தத் திட்டத்தை நிறைவேற்றிட நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கனிவான பார்வைக்கும் கொண்டு வந்திருக்கிறேன். நம்முடைய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அண்ணன் அவர்களின் பார்வைக்கும் கொண்டு வந்திருக்கிறேன். இத்திட்டத்திற்கு 58 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து, உசிலம்பட்டி நகராட்சிக்கு குடிநீர் வழங்கப்பட்டால், அங்குள்ள குடிநீர்ப் பிரச்சினை நிரந்தரமாகத் தீர்வதோடு, அங்குள்ள மக்களின் வாழ்வாதாரமும் உயரும் என்பதைப் பணிவோடு தெரிவித்து, வாய்ப்புக்கு நன்றி கூறி அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், 2011-2016 ஆம் ஆண்டுகளில் உள்ளாட்சித் துறையிலும், குடிநீர் வழங்கல் துறையிலும் எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு 21,988 கோடியே 21 இலட்சம் ரூபாய் அளவிற்கு நிதியை ஒதுக்கி பல்வேறு கூட்டுக் குடிநீர்த் திட்டங்களை நிறைவேற்றி மகத்தான சாதனை புரிந்துள்ளார்கள்.

கடந்த தி.மு.க. ஆட்சியில் 2006-2011 வரையிலும் மொத்தம் 7,280 கோடி ரூபாய் ஒதுக்கினார்கள். மாண்புமிகு அம்மா அவர்கள் கடந்த 5 ஆண்டு காலத்தில் மட்டும் 3 மடங்கு அதிகமாக நிதியை ஒதுக்கியுள்ளார்கள். அதுமட்டுமல்லாமல், அதற்கு முன்னால் கடந்த தி.மு.க. ஆட்சியில் 2011 வரை பார்த்தீர்களென்றால், நாளொன்றுக்கு குடிநீர் அளவாக 4,945 M.L.D. கொடுத்துக்கொண்டிருந்தார்கள். 2011-க்குப் பின்னால் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எடுத்த நடவடிக்கையின் காரணமாக, 7,393 M.L.D. குடிநீர் வழங்கப்படுகிறது. தி.மு.க. ஆட்சியில் வழங்கப்பட்டதைவிட 2,448 M.L.D. கூடுதலாக இந்த 5 ஆண்டுக் கால ஆட்சியில் அம்மா அவர்கள் உயர்த்திக் கொடுத்துள்ளார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மீண்டும் ஆட்சிக்கு வந்ததற்குப் பின்னர், பல்வேறு திட்டங்களை அறிவித்திருக்கிறார்கள். புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவித்ததோடு, அதன் தொடர்ச்சியாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள் அறிவித்ததையும் சேர்த்து, கிட்டத்தட்ட 10,438 கோடி ரூபாய்

2018 மே 30]

அளவிற்கு பல்வேறு திட்டங்களை அறிவித்து, கிட்டத்தட்ட 1,21,082 குடிநீர்த் திட்டப் பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு, இன்றைக்கு வேலைகள் நடைபெற்று வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் உசிலம்பட்டி நகராட்சிக்கு கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயல்படுத்தப்படுவது பற்றிக் கேட்டுள்ளார்கள். அதுகுறித்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களின் கவனத்திற்கு கண்டிப்பாகக் கொண்டு செல்லப்படும். அதுமட்டுமல்ல; 58 கோடி ரூபாய் செலவிலே உசிலம்பட்டி நகராட்சிக்கு குடிநீர்த் திட்டம் எடுத்துக்கொள்ளப்படும். அதுமட்டுமல்ல; கிராம கூட்டுக் குடிநீர்த் திட்டங்களுக்கு மத்திய அரசின் உதவி தொடர்ந்து இருந்து வந்தது. தற்போது அதை நிறுத்திவிட்டார்கள். மேலும், பல்வேறு திட்டங்களுக்கு, பொதுவாக வரக்கூடிய நிதியிலிருந்து மத்திய அரசாங்கம் ஒதுக்குகிறார்கள். கிராமக் கூட்டுக் குடிநீர்த் திட்டங்களைப் பொறுத்தவரையில், நாம் எந்த கிராமக் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தையும் எடுத்துக்கொள்ளலாம். இப்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், பல்வேறு கூட்டுக் குடிநீர்த் திட்டங்களை எடுத்துக்கொள்ளச் சொல்லியிருக்கிறார்கள். அந்தவகையிலே, உசிலம்பட்டி நகராட்சிக்கு 58 கோடி ரூபாய் செலவிலே கூட்டுக் குடிநீர்த் திட்டம் எடுத்துக்கொள்ளப்பட்டு, செயல்படுத்தப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. உ. தனியரசு அவர்கள்.*

திரு. உ. தனியரசு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு முழுவதும் பல்வேறு கூட்டுக் குடிநீர்த் திட்டங்களைக் கொண்டுவந்து, தமிழ்நாட்டு மக்களின் குடிநீர்த் தேவையைப் பூர்த்தி செய்த அரசு, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு. (மேசையைத் தட்டும் ஒலி) அவ்வழியே தொடருகிறது நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் எடப்பாடியார் அவர்களின் அரசு. (மேசையைத் தட்டும் ஒலி)*

இந்த நிலையில், முழுக்க முழுக்க என்னுடைய காங்கேயம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட வெள்ளக்கோவில், காங்கேயம் ஊராட்சி, நகராட்சிப் பகுதிகளிலும், குண்டடம் யூனியன்,

சென்னிமலை யூனியன் பகுதிகளிலும் குடிநீர்ப் பற்றாக்குறை இருப்பது பற்றி நான் ஏற்கெனவே சட்டமன்றத்திலும் சொல்லியிருந்தேன். அதேமாதிரி, தற்போது இரண்டாவது கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் சுமார் 100 கோடி ரூபாயில் கொடுமுடி காவேரி ஆற்றங்கரையிலிருந்து, ஒரு திட்டத்தை நிறைவேற்றி, பணிகள் முடிக்கப்பட்டிருக்கின்றன. இந்த நிலையில், உள்ளாட்சித் துறை, மின் துறைக்குச் செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை காரணமாக, மின்சாரத் துறைக்கான கட்டணத்தைச் செலுத்தாததன் காரணமாக, குடிநீர் விநியோகம் சீராகச் செய்யப்படுவதில்லை என்று நான் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு மாவட்ட ஆட்சியர் நடத்தும் ஆய்வுக் கூட்டங்களிலே சுட்டிக்காட்டியுள்ளேன். அப்போது, அந்த அதிகாரிகள் மின் இணைப்பு இல்லாததால் குடிநீர் வரவில்லை என்று சொன்னார்கள்.

காவேரி-அமராவதி ஆறுகளை நம்பி அந்தப் பகுதிகளில் குடிநீர் சீராக விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. ஆற்றில் நீர் இருக்கும்போதே முறையாக, சீராக நீர் விநியோகிப்பதில் சிரமமும் சங்கடமும் இருக்கிறது. அதேபோல், கொடுமுடி காவேரி ஆற்றில் நீர் இல்லாத காரணத்தாலும், நீர் வரத்து குறைவாக இருக்கிற காரணத்தாலும், குடிநீர் சீராக விநியோகம் செய்யப்படுவதில்லை என்கிற கோரிக்கைகள் பொது மக்களிடமிருந்து வருவதை நான் பார்க்கிறேன். எனவே, மின்சாரத் துறைக்குச் செலுத்த வேண்டிய நிலுவைத் தொகையை உள்ளாட்சித் துறையிலிருந்து செலுத்தி, உரிய மின் இணைப்புகளைத் தந்து, ஏற்கெனவே பணி முடிக்கப்பட்ட நிலையிருக்கின்ற கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலம் மக்களுக்கு முறையாக, சீராக, விரைந்து குடிநீர் வழங்க மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் ஆவன செய்வாரா என்று தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியிலே இந்தியாவிலேயே எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு, மாண்புமிகு அம்மா அவர்கள் எடுத்த நடவடிக்கைகள் காரணமாகத்தான் தமிழகத்தின் ஊரகப் பகுதிகளில் மட்டும் 99.11 விழுக்காடு அளவிற்கு குழாய்கள்மூலம்*

2018 மே 30]

குடிநீர் விநியோகிக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) வேறு எந்த மாநிலங்களிலும் இவ்வாறு இல்லை. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்று ஒரு வருடத்தைப் பூர்த்தி செய்து, பல்வேறு சாதனைகள் புரிந்துள்ளார்கள். கடந்த 142 வருடங்களில் இல்லாத அளவிற்கு பெரிய அளவில் வறட்சியும் அவர் முதலமைச்சராக இருக்கும் இந்தக் காலக்கட்டத்தில் வந்தது. அந்த நிலையிலும் bore well *மூலமும், வேறு பல* sources *மூலமும் தண்ணீர் எடுத்து, சிறப்பாகக் குடிநீர் கொடுத்துவிட்டோம். தற்போது எதிர்பாராத காலக்கட்டத்திலும், எல்லாப் பகுதிகளிலும் மழை பெய்கிறது. எல்லா பகுதிகளிலும் ஓரளவிற்கு நல்ல மழை பெய்திருக்கிறது. எனவே, குடிநீர்ப் பிரச்சினை சென்னை உட்பட எங்குமே இல்லை. மின்சாரத் துறை மூலமாக மின் இணைப்பு கொடுக்காததால், குடிநீர்த் திட்டத்தைச் செயல்பாட்டிற்குக் கொண்டுவர முடியவில்லை என்று மாண்புமிகு உறுப்பினர் கூறினார். அப்படி ஒரு சூழ்நிலை அரசுக்குத் தெரியாமல் ஏதாவது ஓரிரு இடங்களில் இருந்திருக்கலாம். அவை உடனடியாக அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டால், மாண்புமிகு முதலமைச்சர் மற்றும் மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களின் தனி கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு, உடனடியாக சரி செய்யப்படும். அதுபோன்றதொரு சூழ்நிலை இல்லை. இது முக்கியமான துறை என்பதால், குடிநீருக்கு உடனடி முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் சொல்லியிருக்கிறார்கள். எனவே, அந்தமாதிரி ஒரு சூழ்நிலை அங்கு இருந்தாலும்கூட, உடனடியாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு, நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதைப் பொறுத்தளவில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்பேரில் மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களும், துறை அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியிருக்கிறார்கள். அந்தமாதிரி பிரச்சினை எங்கேயும் இல்லை.* EB—*ஐப் பொறுத்தளவில், மின் இணைப்பு உடனே கொடுக்கப்படுகிறது. நன்றி.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 84, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. ராமு, மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*